LAW & SOCIETY TRUST

# புதிய சட்டங்கள் மற்றும் நிறைவேற்று தீர்மானங்களின் இற்றைப்படுத்தல்.

# - ஏப்ரல் 2026 -


12th May 2026

LAW TRACKER

# புதிய சட்டங்கள் மற்றும் நிறைவேற்றுத் தீர்மானங்கள் - ஏப்பிரல் 2026

*சுருக்கம் | 12 மே 2026*

### இலங்கையின் சட்டவாக்கச் செயன்முறை




### ஏப்பிரல் 2026 இன் இற்றைப்படுத்தல்கள்

## I. சான்றளிக்கப்பட்ட சட்டங்கள்

**2026 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டம்** (பாராளுமன்றச் சபாநாயகரால் 2026, ஏப்பிரல் 9 ஆம் திகதி சான்றளிக்கப்பட்டது) — 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துகின்றது. பதிவுசெய்தல் மற்றும் பதிவை நீக்குதல் ஆகியவற்றிற்கான உச்சவரம்புகளை 2026 யூலை 1 ஆம் திகதி பயனுக்கு வரும் வகையில் தெளிவுபடுத்துகின்றது. முன்னர் விலக்களிப்பு செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகன இறக்குமதிகள், 2026 மே 1 ஆம் திகதி பயனுக்கு வரும் வகையில் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றன.

## II. வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டமூலங்கள்

1. **2026 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம்** (29 ஏப்பிரல் 2026) – சேர்பெறுமதி வரியைப் பதிவு செய்வதற்கான தொடக்கநிலையை, 2026 யூலை 1 ஆம் திகதியிலிருந்து, காலாண்டிற்கு ரூ. 9 மில்லியன் / வருடத்திற்கு ரூ. 36 மில்லியன் எனக் குறைக்கின்றது. வதிவுள்ளவராக அல்லாத டிஜிட்டல் சேவை வழங்குநர்களுக்கு சேர்பெறுமதி வரிக் கடப்பாடுகளை விரிவுபடுத்துகின்றது. நிதிச் சேவைகள் மீதான சேர்பெறுமதி வரியை 20.5 % இலிருந்து 18 % ஆக உயர்த்துகின்றது. பாதுகாப்பான விற்பனைமுனைப் பொறிகளைக் கட்டாயமாக்குகின்றது. வரி ஏய்ப்பிற்கான தண்டங்களை, பின்னோக்கிய வகையில் 2025, ஒக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து அதிகரிக்கின்றது.
2. **2026 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க நிதித் (திருத்தச்) சட்டமூலம்** (23 ஏப்பிரல் 2026) - 2026, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் வணிகத் தொழிற்பாடுகளை ஆரம்பிக்கும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட செல்லிடத் தொலைபேசிக் கோபுரங்களுக்கு செல்லிடத் தொலைபேசிக் கோபுர அறவீட்டிலிருந்து ஐந்து வருடங்களுக்கு விலக்களிப்பு வழங்குகின்றது.
3. **2026 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம்** (23 ஏப்பிரல் 2026) - அறவீட்டினை (உரிமமளிக்கப்பட்ட தொழிற்படுத்துநர்களுக்கு மட்டுமன்றி) அனைத்து வழங்குநர்களுக்கும் விரிவுபடுத்துகின்றது. அறவீட்டு அடிப்படையை மீள வரையறை செய்கின்றது, அறவிடமுடியாத தனிசுக் கழிப்பனவுகளை அறிமுகம் செய்கின்றது, அத்துடன் வரலாற்றுரீதியான வீத அட்டவணை ஒன்றினையும் வழங்குகின்றது. (2011இலிருந்து தற்போதுவரை)
4. **2026 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம்** (22 ஏப்பிரல் 2026) – தேசிய சூழல் சட்டத்தை முற்றாக செம்மைப்படுத்துகின்றது. மூலோபாயச் சூழல்சார் மதிப்பீடுகள், விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புடைமை, தீங்கு விளைவிக்கும் கழிவுகளுக்கு உரிமமளித்தல், மற்றும் இரசாயனக் கழிவு முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆணையை விரிவுபடுத்தி, அதிகாரசபையை மீள்கட்டமைப்புச் செய்கின்றது. கழிவுநீர் வெளிவிடுகைக்கான கட்டணங்களை அறிமுகம் செய்கின்றது. தண்டங்களைக் கணிசமான அளவில் அதிகரிக்கின்றது சில தவறுகளைப் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாக ஆக்குகின்றது.

## III. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலங்கள்

1. **2026 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம்** (2026 ஏப்பிரல் 9 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது). பயங்கரவாதி நிதியளிப்பின் வரைவிலக்கணத்தைப் பரந்ததாக்குகின்றது. இலங்கையை இலக்கு வைக்கும் ஆள்புல எல்லை கடந்த தவறுகளுக்கு சட்டத்தை ஏற்புடையதாக்குகின்றது. முடக்குதல் கட்டளைகளை மேம்படுத்துவதுடன் பொலிசாரின் விசாரணைத் தத்துவங்களையும் விரிவுபடுத்துகின்றது.
2. **2026 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, நிதிக் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம்** (2026 ஏப்பிரல் 9 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது). பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களைப் பெருமளவில் தயாரித்தலுக்கான நிதியளிப்பை உள்ளடக்குவதற்காக AML/CFT சட்டகத்தை விரிவுபடுத்துகின்றது. ரூ. 200 மில்லியன் வரையான தண்டனைகளை விதிக்கும் தத்துவங்களுடனான தன்னாட்சியுள்ள அமைப்பு ஒன்றாக நிதிசார் உளவறிதற் கூறைத் தாபிக்கின்றது. குற்றவியல் பொறுப்புடைமையை அதிகரிக்கின்றது.

## IV. தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள்

### சர்வதேச விவகாரங்கள் மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பு

1. விவசாயம், வலுசக்தி, காலநிலை மாற்றம், மற்றும் சுற்றாடல் நிலைபெறுதன்மை என்பவற்றில் இலங்கை விஞ்ஞானிகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக தாய்லாந்தின் தொழில்நுட்பத்திற்கான ஆசிய நிறுவனத்துடனான (AIT) புரிந்துணர்வு ஒப்பந்தம். (ஓகஸ்ட் 2026–2031). (4 ஏப்பிரல் 2026)
2. பாதுகாப்புப் பயிற்சி, கல்வி, சுகாதாரம், சுற்றுலாத்துறை, சுவடிக்காப்பு, மற்றும் விளையாட்டு ஒத்துழைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதான ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மாலைதீவு சனாதிபதியின் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது (2026, மே 3 – 5) கைச்சாத்திடப்படுவதற்காக அங்கீகாரம் வழங்கியது. (27 ஏப்பிரல் 2026)

### கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி

1. இலங்கைப் பிக்குமார் பல்கலைக்கழகத்தின் பல்நோக்குக் கட்டடத்திற்காக ரூ. 663 மில்லியன் என்னும் திருத்தப்பட்ட செலவு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது (2018 இல் அங்கீகரிக்கப்பட்ட 486 மில்லியனிலிருந்து உயர்த்தப்பட்ட தொகை). (20 ஏப்பிரல் 2026)
2. ரூ. 289 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ள செலவில், மாவட்டத்திற்கு ஒன்று என்னும் வீதத்தில், வணிகக் கல்விக்கான 25 பிராந்திய செயன்முறைசார் கற்றல் மையங்களைத் தாபித்தல் (2026 - 2028). (20 ஏப்பிரல் 2026)
3. பொதுநலவாயக் கற்றல் நிறுவனத்துடன் இணைந்து இலங்கைக்கான நுண்-சான்றிதழ்கள் தொடர்பான கொள்கை ஒன்றினை விருத்தி செய்வதற்கான ஒப்பந்தத்திற்கு அங்கீகாரம் வழங்கிய செயலமர்வு 2026 மே மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ளது. (27 ஏப்பிரல் 2026)

### நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி

1. சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் நிதித் (திருத்தச்) சட்டமூலம் (தொலைத்தொடர்புக் கோபுர வரி விலக்களிப்பு) ஆகியவற்றிற்கு சட்டத்துறைத் தலைமையதிபதியின் உடன்பாடு பெறப்பட்டுள்ளதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்காகவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காகவும் அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கியது. (4 ஏப்பிரல் 2026)
2. எரிபொருள் விலையினால் பாதிக்கப்பட்ட குழுக்களுக்கான இலக்கு வைக்கப்பட்ட மேலதிக நிவாரணங்களுக்கு அங்கீகாரம் வழங்கியது: விசேட அஸ்வெசும கொடுப்பனவுகள் (குடும்பம் ஒன்றிற்கு ரூ. 2,500 – 7,500) 90 அலகுகளுக்குக் குறைவாகப் பயன்படுத்தும் பாவனையாளர்களுக்கான மேலதிக மின்சார செலவைப் பொறுப்பேற்றல் அதிகரிக்கப்பட்ட உர மானியங்கள் லீற்றருக்கு ரூ. 50 என்னும் மீன்பிடி எரிபொருள் மானியங்கள் மற்றும் சிறியளவிலான தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள். (4 ஏப்பிரல் 2026)
3. இலங்கையின் சர்வதேச விமானசேவை வழங்குநர்களுக்காக மறுசீரமைக்கப்பட்ட விமான டயர்களை (HS குறியீடு 4012.13) அனுமதிக்கும் இறக்குமதி ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்றத்தின் இணக்கத்திற்காக சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. (20 ஏப்பிரல் 2026)
4. அரசாங்க நிறுவனங்கள் மற்றும் நியதிச்சட்டச் சபைகளில், ஏறத்தாழ 9,800 தற்காலிக மற்றும் அமய (casual) பகிரங்க சேவை ஊழியர்களின் நிரந்தர நியமனங்களுக்கு அங்கீகாரம் வழங்கியது. (27 ஏப்பிரல் 2026)
5. (2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க) இலங்கை மத்திய வங்கியின் மூலம் புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்களைச் சேகரித்தல் மீதான விதிகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்டன; 2025 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் நிதி அறிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டு அறிக்கை ஆகியவையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்டன. (27 ஏப்பிரல் 2026)

### போக்குவரத்து, பெருந்தெருக்கள், மற்றும் நகர அபிவிருத்தி

1. காலிக் கோட்டையில் உள்ள நீதிமன்றங்கள் பெலிகஹவிற்கு இடமாற்றப்படவுள்ளன; பாரிய காலி அபிவிருத்தித் திட்டத்தின் (2021 – 2030) கீழ் சுற்றுலாத்துறையின் அரச – தனியார் பங்காண்மை ஒன்றிற்காகத் தற்போதுள்ள கட்டடங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கையளிக்கப்பட்டன (4 ஏப்பிரல் 2026)
2. 2025 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்துடன் நேரொத்ததாக, மாகாணங்களுக்கிடையேயான பயணிகள் போக்குவரத்து உரிமப்பத்திரங்களுக்கான திருத்தப்பட்ட முறையியல்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்டன (20 ஏப்பிரல் 2026)
3. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்க மையம் ஒன்றாக விருத்தி செய்யப்படுவதற்காக, கொழும்பு 10, மருதானை வீதியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியின் (1 ஏக்கர், 1 றூட், 12.4 பேர்ச்சஸ்) 50 வருட குத்தகைக்கான முதலீட்டு முன்மொழிவுகள் கோரப்பட்டன. (27 ஏப்பிரல் 2026)

## சுகாதாரம்

1. தம்புள்ளை அபிவிருத்திப் பெருந்திட்டத்தின் கீழ், தம்புள்ளை ஆதார வைத்தியசாலை (354 கட்டில்கள், மத்திய மாகாணம்), புதிய 5 ஏக்கர் இடமொன்றிற்கு இடம் மாற்றப்படுவதற்காக மத்திய அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது; மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 5 பில்லியன். (27 ஏப்பிரல் 2026)
2. உள்ளடக்க முகாமைத்துவம், செய்திப் பகிர்வு, மற்றும் நேயர்கள் குறித்த பகுப்பாய்வுகள் என்பவற்றிற்காக சுயாதீனத் தொலைக்காட்சி வலையமைப்பினுள் (ITN) டிஜிட்டல் அலகு தாபிக்கப்படவுள்ளது. (27 ஏப்பிரல் 2026)

## புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள்

1. சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மத வழிபாட்டிடங்களை மீள நிர்மாணிப்பதற்கான நிதியுதவிக்கு அங்கீகாரம் வழங்கியது: பௌத்த, இந்து, மற்றும் கிறிஸ்தவ தலங்களை உள்ளடக்கி, முழுமையாக அழிக்கப்பட்ட இடங்களுக்கு ரூ. 7.5 மில்லியன் மற்றும் பகுதியளவில் சேதமடைந்த இடங்களுக்கு ரூ. 5 மில்லியன். (27 ஏப்பிரல் 2026)
2. ஐக்கிய அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் அமைந்துள்ள மஹா விபஸ்சனா தியான நிலையத்தில், 2026, மே 2 முதல் 10 ஆம் திகதி வரை, புத்த பெருமானின் புனித தாதுக்களின் மூன்று தொகுதிகள் பொதுமக்களின் வழிபாட்டிற்காகக் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (20 ஏப்பிரல் 2026)

## பாதுகாப்பு

1. டித்வா சூறாவளியினால் முழுமையாகச் சேதமடைந்த, பகுதியளவில் சேதமடைந்த, அல்லது நிலச்சரிவு ஏற்படும் ஆபத்து மிக்க வீடுகளில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 5 மில்லியன் வீடமைப்பு மானியம் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. 10 பேர்ச்சஸ் காணித்துண்டு பெருந்தோட்டக் கம்பனியால் வழங்கப்படவுள்ளது. (4 ஏப்பிரல் 2026)
2. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆணைக்குழுவின் விதப்புரைகளின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிப்பதற்கு சனாதிபதி செயலகத்தின் கீழ் குழுவொன்று தாபிக்கப்படும். 2021இன் ஆரம்ப அமைச்சரவை அங்கீகாரத்தின் பின்னர் கண்காணிப்புப் எதுவும் காணப்படவில்லை. (20 ஏப்பிரல் 2026)
3. தற்போது வழங்கப்படும் ரூ. 25,000 மாதாந்த வாடகைக் கொடுப்பனவிற்கு மேலதிகமாக, இலங்கை இராணுவத்தின் மனித உழைப்பைப் பயன்படுத்தி, டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு (கேகாலை, கண்டி, நுவரேலியா, பதுளை) இடைக்கால வீடுகளை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியது. (27 ஏப்பிரல் 2026)

## வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல்

1. ‘ஒரு வசதியான வீடு – ஓர் ஆரோக்கியமான வாழ்வு’ என்னும் சட்டகத்துடன் நேரொத்ததாக, நிபுணர் குழு ஒன்றினால் தேசிய வீடமைப்புக் கொள்கை (2019 இல் இறுதியாகத் திருத்தப்பட்டது) இற்றைப்படுத்தப்படவுள்ளது. (20 ஏப்பிரல் 2026)
2. 64,407 திட்டமிடப்பட்ட அலகுகளை உள்ளடக்கிய, தடைப்பட்டுள்ள 2,562 வீடமைப்புக் கருத்திட்டங்களை (2015 – 2019) மீளாய்வு செய்வதற்காக நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. இவற்றில் 10,532 அலகுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன; பூர்த்தி செய்வதற்காக மதிப்பிடப்பட்டுள்ள மேலதிக செலவு ரூ. 11.26 பில்லியன். (20 ஏப்பிரல் 2026)

## பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் குடிவரவு

தற்போதைய வதிவிடக் கொள்திறனை விஞ்சியுள்ள அதிகரித்த தேவையைத் தொடர்ந்து, ‘ஒன்றிணைந்த தேசம் (ரடம எகட்ட)’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், குறைந்த பயன்பாட்டை உடைய ஆறு அரச கட்டடங்கள் குறுகிய கால போதைப்பொருள் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களாக மாற்றியமைக்கப்படவுள்ளன. (20 ஏப்பிரல் 2026)

## கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி

கைத்தொழில் அபிவிருத்திச் சபை, NEDA, மற்றும் சிறு தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றை ஒன்றிணைத்து, இலங்கைக் கைத்தொழில் மாற்ற மற்றும் புத்தாக்க அதிகாரசபையைத் தாபிப்பதற்கான சட்டமூலம் ஒன்றினை வரையுமாறு சட்ட வரைஞருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. (20 ஏப்பிரல் 2026)

## சுற்றாடல்

வணிகரீதியிலான சட்டவிரோதமான மற்றும் அளவுக்கதிகமான நிலத்தடி நீர் மற்றும் மேற்பரப்பு நீர் பிரித்தெடுப்பை ஒழுங்குறுத்தும் பொருட்டு, 1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நீர் வளங்கள் சபைச் சட்டத்திற்கான திருத்தங்களை வரையுமாறு சட்ட வரைஞருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. (4 ஏப்பிரல் 2026)

## டிஜிட்டல் பொருளாதாரம்

அரசாங்கத்தின் டிஜிட்டல் பெறுகையை நவீனமயப்படுத்துவதற்காக, டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் GovTech பயன்பாடு/ சேவைச் சந்தை (Service Marketplace) ஆகியவற்றை மூன்று கட்டங்களாகத் தாபிப்பதற்கான (2026 – 2027) ரூ. 563 மில்லியன் கருத்திட்டம் ஒன்றிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (4 ஏப்பிரல் 2026)

## விளையாட்டு

தேசிய ரீதியில் விசேட திறமைகளை வெளிப்படுத்திய விளையாட்டு வீரர்களுக்கு, வெளிப்படைத்தன்மையுடன், தகுதி அடிப்படையில் அரசாங்க மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் அரச சேவை வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கான கொள்கைக் கட்டமைப்பிற்கு அங்கீகாரம் வழங்கியது. (4 ஏப்பிரல் 2026)

*பொறுப்புத்துறப்பு – இந்த ஆவணம் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையினால் வேண்டப்பட்டவாறாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு சுருக்க விளக்கம் மாத்திரமேயாகும். எவ்வித சட்ட அல்லது கொள்கைப் பகுப்பாய்வையும் இந்த ஆவணம் கொண்டிருக்கவில்லை என்பதுடன் சட்ட ஆலோசனையாக இதன் மீது தங்கியிருத்தலுமாகாது. சட்டங்கள் மற்றும் தீர்மானங்களின் விபரங்கள் மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டவை.*

*திருத்தங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களுக்கு tegal.lawchambers@gmail.com இனைத் தொடர்பு கொள்ளவும்*